# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


DATE : 28/04/2026

## ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் தாய் சேய் திட்ட விதிமுறைகள்

தாய் & சேய் திட்டத்தின் விதிமுறைகள் பின்வருமாறு:

1. ஒவ்வொரு கபாடி வீரரும் அவர் சார்ந்த அணியின் A B C D... என எத்தனை அணிகள் இருந்தாலும் அந்த அணிகள் அந்த வீரருக்கு தாய் அணியாகும் மேலும் அவ்வணியில் ஏதாவது வீரர்கள் பள்ளி கல்லூரியில் படித்தால் (கண்டிப்பாக படிக்க வேண்டும்) அந்த வீரர்கள் போட்டியில் கலந்து கொள்ளும்போது பள்ளி கல்லூரி அணியில் விளையாடும் சூழல் ஏற்பட்டால் அந்த வீரர்களுக்கு அவர்கள் விளையாடும் பள்ளி கல்லூரி அணிகளும் தாய் அணிகள் ஆகும்.

2. தாய் & சேய் விண்ணபத்தில் உண்மையிலேயே அந்த பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடப்பு ஆண்டில் படிக்கின்ற வீரர்கள் மட்டுமே அவர்கள் பள்ளி கல்லூரி அணியில் ஆடும் போது அது தாய் அணியாக கருதப்படும்.

3. அதேபோல அந்த வீரர் ஈரோடு மாவட்டத்தில் ஏதாவது ஒரு பிற அணியில் தொடர்ந்து விளையாட நினைத்தால் அதுகுறித்து விண்ணப்பம் கொடுக்கும் பட்சத்தில் அந்த வீரருக்கு அந்த அணி சேய் அணியாகும்

4. ஒரு வீரர் தனது சேய் அணியாக எந்த அணியை குறிப்பிடுகிறாரோ அந்த அணியின் A B C என அனைத்திலும் விளையாடலாம்.

5. எந்த ஒரு வெளி மாவட்ட வீரரும் ஈரோடு மாவட்ட அணிகளில் தாய் & சேய் என சொல்லி விளையாட அனுமதி இல்லை வெளி மாவட்ட வீரராக இருந்தால் அவரின் ஆதார் கார்டு ஈரோடு மாவட்டத்தில் இருந்தால் ஈரோடு மாவட்ட அணிகளில் தாய் & சேய் போட்டு விளையாடலாம்.

6. தாய் சேய் திட்டம் குறித்து விண்ணப்ப படிவத்தில் ஒவ்வொரு அணியிலும் உள்ள கபடி வீரர்கள் வீராங்கனைகளுக்கு தனித்தனியாக அவர்கள் பெயர். முகவரி, ஆதார் எண், Blood group. தொலைபேசி எண், வீரர் பதிவு எண்,வீரரின் போட்டோ, அந்த அணியின் பெயர் மற்றும் வீரரின் மருத்துவ காப்பீடு விபரம் குறித்த முழு விபரங்களை சேகரித்து அந்த வீரரின் தாய் & சேய் அணிகளின் பெயர் விபரங்கள் குறிப்பிட்டு தரவேண்டும். அந்த வீரர் கையெழுத்தும் இதில் மாவட்ட தலைவர் / செயலாளர் கையொப்பமிட்டு கணினியில் பதிவேற்றம் செய்யபடும்.

7. மேலும் அனைத்து வீரர்களுக்கும் வீரர்கள் அடையாள எண் (Players ID எண்) வழங்கப்படும்

8. EDAKA Website ல் ஒவ்வொரு வீரரின் அடையாள எண்ணை பதிவு செய்தால் அந்த வீரரின் முழு விபரம் தெளிவாக காண முடியும் அது மட்டுமல்ல அந்த வீரரின் அணியில் உள்ள வீரர்களின் முழு விபரமும் ஒரு நிமிடத்தில் அனைவரும் காண முடியும்.

9. ஈரோடு மாவட்டத்தின் கபாடி சம்பந்தப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் அனைவரும் வெளிப்படையாக அறிந்து கொள்ளும் வண்ணம் எளிதாக EDAKA website உருவாக்கப்பட்டு உள்ளது.

10. நமது கபடி வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் தங்களின் தாய் சேய் விண்ணப்பம் கொடுத்து வீரர்கள் அடையாள எண் Players ID எண் பெறாமல் இருந்தால் உடனடியாக தங்கள் அணியின் விண்ணப்பம் பூர்த்தி செய்து கொடுத்து பெற்று கொள்ள வேண்டும்.

11. வீரர்கள் இளம் வீரர்களாக இருந்தாலும் கூட தங்களுக்கு சொந்த அணி இல்லை என்றாலும் ஏதாவது ஒரு அணியில் உங்களை இணைத்து கொண்டு Players ID எண் பெற்று கொள்ளுங்கள். இனிவரும் போட்டிகளில் Players ID எண் இல்லாமல் எந்த ஒரு வீரரும் ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் கபடி போட்டிகளில் விளையாட முடியாது.

Chairman
S.K.Ramasamy. LIC
Sundakkapalayam

President
P.Rajakumar
Gobichettipalayam
97892 23379
yazhinirajkumar2000@gmail.com

Secretary (Incharge)
A.C.Thangavel
Joint Secretary
Chennimalai
99415 21256

Treasurer
P.Vijayakumar
Erode
98427 53547

Organizing Secretary
K.Gangadharan
Erode
K.Velliangiri
Chennimalai

12. கபடி போட்டி நடக்கும் இடங்களில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு அணியும் அங்கே EDAKA ல் புதிதாக வைக்கபடும் Players Entry form Book ல் கண்டிப்பாக தங்கள் அணியின் வீரர் பெயர் Player ID எண் குறிப்பிட வேண்டும் அணி வீரர்கள் குழு புகைப்படம் எடுத்தவுடன் அங்கே விழாதிடலில் உள்ள Players Entry form Book ல் தங்கள் அணியின் வீரர்கள் பெயர் Players ID எண் குறிப்பிட்டவுடன் தான் நுழைவுக்கட்டணம் பெறப்படும்.

13. மறுநாள் வரும் 4 வீரர்களின் விபரங்களும் மறுநாள் விழாதிடலில் இருக்கும் Players Entry Form Book ல் கண்டிப்பாக குறிப்பிடவேண்டும்.

14. Players Entry Form Book இனி ஒவ்வொரு போட்டியிலும் விழா திடலில் இருக்கும். ஆகவே ஈரோடு மாவட்ட வீரர்கள் வீராங்கனைகள் உங்கள் ID எண்ணை கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

15. Players ID எண் மிகவும் முக்கியத்துவம் என்பதை கருத்தில் கொண்டு தாய் சேய் திட்டம் அமுலுக்கு வந்தவுடன் உங்கள் பனியனில் உங்கள் அணியின் பெயருக்கு கீழே கூட உங்கள் Players ID எண் பிரிண்ட் போட்டு விளையாட வேண்டும்.

16. இந்த நடைமுறை அனைத்து அணிகளின் வளர்ச்சி மற்றும் வீரர்கள் நலனை கருத்தில் கொண்டு அனைவரின் பேராதரவோடு செயல்படுத்தபடுகிறது. ஆகவே அனைத்து வீரர்கள் வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள் முன்னாள் வீரர்கள் கபடி போட்டி நடத்தும் விழாக்குழுவினர் இத்திட்டம் நல்வழியில் செயல்படுத்த தங்கள் ஆக்கப் பூர்வமான உதவிகளை செய்யும் பொருட்டு ஆங்காங்கே இன்னும் தாய் சேய் விண்ணப்பம் தராதவர்களை வலியுறுத்தி விண்ணப்பம் தர முயற்சி செய்ய வேண்டும்.

17. மேலும் ஈரோடு மாவட்டத்தில் பரிசு தொகை Rs.50,000/- மற்றும் அதற்கு மேல் வைத்து இருந்தால் அந்த போட்டியில் வெளி மாவட்ட அணிகள் வலிமையாக வரும் காரணத்தால் அந்த போட்டிகளில் ஈரோடு மாவட்ட வீரர்களுக்கு விளையாட தாய் & சேய் விலக்கு அளிக்கபடும்.

18. மேலும் வெளி மாவட்ட அணிகள் ஈரோடு மாவட்த்தில் நடைபெறும் கபடி போட்டிகளில் அந்தந்த மாவட்டங்களில் தாய் & சேய் திட்டம் அமுலுக்கு வரும் வரை அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் விளையாட தடைஏதும் இல்லை.

19. வெளி மாவட்டத்தில் நடைபெறும் கபாடி போட்டிகளில் பங்கு பெற செல்லும் போது (அந்தந்த மாவட்டங்களில் தாய் & சேய் திட்டம் அமுலுக்கு வரும் வரை) ஈரோடு மாவட்ட வீரர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அணியாக கலந்து விளையாட தடை ஏதுமில்லை.

20. வெளி மாவட்ட கபடி வீரர்கள் ஈரோடு மாவட்டத்தில் Rs. 50,000/- மற்றும் அதற்கு மேற்பட்ட பரிசு க்கான கபாடி போட்டிகளில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அணிகளில் கலந்து விளையாட தடை ஏதுமில்லை.

21. ஈரோடு மாவட்ட கபாடி வீரர்கள் வெளிமாட்டத்தில் நடைபெறும் கபாடி போட்டிகளில் வெளி மாவட்ட அணிகளில் கலந்து விளையாட தடை இல்லை (அந்தந்த மாவட்டங்களில் தாய் & சேய் திட்டம் அமுலுக்கு வரும் வரை).

22. ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் கபாடி போட்டிகளில் எந்த ஒரு கபடி வீரரோ அல்லது அணியோ அல்லது பிற மாவட்ட கபடி வீர்கேளா அணியோ விழா கமிட்டி பெயரில் விளையாட அனுமதி இல்லை.

23. இந்த தாய் & சேய் திட்டம்

சப்ஜூனியர்

ஜூனியர்

சீனியர்

ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபால் அணிகளுக்கும் உண்டு.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


24. இந்த தாய் & சேய் திட்டத்தில் சேர்ந்த வீரர்கள் & வீராங்கனைகள் தங்கள் தாய் அணியையோ சேய் அணியையோ மாற்ற விரும்பினால் தாய் - சேய் திட்டம் அமலுக்கு வந்த நாளில் இருந்து ஒரு வருட காலம் இடைவெளி கழித்து தான் முடியும். அதற்கு முன்பு எக்காரணம் கொண்டும் மாற்றி தர இயலாது.

25. முன்னாள் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் கபாடி போட்டிகளில் எந்த வெளி போட்டிகளிலும் விளையாடாமல் அவ்வப்போது செட்பண்ணி விளையாடும் முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு தாய் & சேய் அடையாள எண் அவசியம் இல்லை. அதே சமயம் அந்த அணியில் ரெகுலராக விளையாடும் வீரர்கள் இருந்தால் அவர்கள் தாய் & சேய் அடையாள எண் பெற்று விதிமுறையை பின்பற்றி தான் விளையாட முடியும்.

26. பள்ளி மற்றும் கல்லூரிகளில் வெளி மாவட்ட வீரர்கள் இருந்தால் அவர்கள் அந்த பள்ளி கல்லூரி அணிகள் சார்பாக மட்டுமே ஈரோடு மாவட்ட கபாடி போட்டிகளில் பங்கு பெற்று விளையாட முடியும் வேறு எந்த அணியிலும் தாய் & சேய் Players ID போட முடியாது.

27. ஈரோடு மாவட்டத்தில் அனைத்து கல்லூரி மற்றும் பள்ளி கபாடி அணிகளில் வெளி மாவட்ட வீரர்கள் இருந்தால் அந்த கல்லூரி முதல்வர் மற்றும் உடற்க்கல்வி இயக்குநரிடம் கையொப்பமிட்ட விண்ணப்பம் பூர்த்தி செய்து கல்லூரியில் படிப்பதற்க்கான கல்லூரி அடையாள அட்டை உள்ளிட்டவற்றை EDAKA-ல் கொடுத்துவிட வேண்டும்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC<br>Sundakkapalayam | P.Rajakumar<br>Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | A.C.Thangavel<br>Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | P.Vijayakumar<br>Erode<br>98427 53547 | K.Gangadharan<br>Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


28. தாய் & சேய் திட்டம் அமுலுக்கு முழுமையாக வந்த பிறகு ஏதாவது ஒரு வீரர் தாய் & சேய் திட்ட விதிமுறையை மீறி வேறு அணியில் விளையாடி அது கண்டறியபட்டால் அந்த வீரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஆறுமாத காலம் ஈரோடு மாவட்டத்தில் விளையாட தடை விதிக்கப்படும்.

29. இந்த தாய் & சேய் திட்டத்தில் அனைத்து அணிகளின் வீரர்களின் முழு விபரங்கள் தெளிவாக குறிப்பிட்டு **Erode District Amateur Kabaddi Association WEBSITE** ல் பதிவேற்றம் செய்யப்படும். அந்த **WEBSITE** ஓபன் செய்து **Team and Players details** என்ற **page** ஓபன் செய்து ஒரு நிமிடத்தில் எந்த ஒரு வீரரின் முழு விபரத்தை "நடுவர் உள்ளிட்ட அனைவரும் எளிதில் கண்டறியலாம்.

ஈரோடு மாவட்டத்தில் கபாடி விளையாட்டின் வளர்ச்சிக்கும் கபாடி வீரர்களின் நலனுக்கும் இந்த திட்டம் உறுதியாக தெளிவாக அமுல்படுத்தப்படுகிறது. அனைத்து வீரர்களும் பயிற்சியாளர்களும் தங்கள் அணியின் நலன் கருதி இந்த திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி உதவிட கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்

[signature] 28/01/2026

(பெ.ராஜகுமார்)

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.

செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்.

P. RAJAKUMAR
PRESIDENT
Erode Dt. Amateur Kabaddi Assoc.
ERODE - 638 452.